# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1949 - 2016 ජනවාරි මස 08 වැනි සිකුරාදා - 2016.01.08**

*1949 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 66 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 76 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, சனவரி மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, சனவரி மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### தமிழ் மொழி மூல விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - மன்னார் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, மாசி மாதம் 8 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, திசெம்பர் 16.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மன்னார் | மன்னார் நகரம் | எருக்கலம்பிட்டி பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மன்னார் |

1-278

---

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### நீதி அமைச்சின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்தின் உதவிச் செயலாளர் (சட்டம்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2015

இவ்வமைச்சின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்தின் உதவிச் செயலாளர் (சட்டம்) பதவிகளில் நிலவுகின்ற 2 வெற்றிடங்களுக்காக தகுதியுடையவர்களைத் தெரிவுசெய்துகொள்வதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைவாக தயார்செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கீழே குறிப்பிடப்படும் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக "செயலாளர், நீதி அமைச்சு, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி, கொழும்பு 12" என்னும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவு அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையில் "நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்தின் உதவிச் செயலாளர் (சட்டம்) பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற இறுதித் திகதி 2016.02.08 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பமொன்று அல்லது அது சம்பந்தப்பட்ட கடிதமொன்று அஞ்சலில் காணாமற் போனதாக அல்லது தாமதமானதாக செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களைத் தாமதம் செய்வதனால் ஏற்படுகின்ற நட்டங்களை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலம் நடாத்தப்படுகின்ற அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் பெற்றுக்கொடுக்கப்படுகின்ற புள்ளிகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர்.

நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின்படி தீர்மானிக்கப்படுகின்றது.

2. **சேவை நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது.

(ii) இப்பதவியில் நியமனம் பெறுகின்ற அலுவலர்கள் மூன்று (3) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவதுடன் அம்மூன்று (03) வருட காலத்திற்குள் முதலாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(iii) பொது நிருவாகச் சுற்றறிக்கை 1/2014 இன்படி மற்றைய மொழி பற்றிய தேர்ச்சி மட்டத்தை 5 வருட காலத்துக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். அரச கரும மொழி அல்லாத மொழி மூலமொன்றில் சேவையில் சேர்ந்த அலுவலர்கள் 3 வருட காலத்துக்குள் அரச கரும மொழியொன்றின் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் மற்றைய அரச கரும மொழி பற்றிய தேர்ச்சியை 5 வருட காலத்துக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். 1 ஆம் தொகுதிக்குரிய இரண்டாம் அரச கரும மொழி பற்றிய தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கை முறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்கள ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்படுகிறது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு 6-2006 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின்படி எஸ்எல்-1-2006, ரூபா 22,935-10X645-8X790-17X1,050-ரூ. 53,555 (மாதாந்த) சம்பள அளவுத் திட்டமொன்று உரித்தாகிறது

4. **தகைமைகள் :**

(i) **கல்வித் தகைமைகள் மற்றும் தொழிற்தகைமைகள்**.- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணி ஒருவராக இருத்தல்.

(ii) **அனுபவம்**.- உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் 3 வருட காலத்துக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

5. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு இவ்வுச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

6. **உடற் தகைமைகள்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியில் தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

7. **பிற தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும் ;
(ii) நன்றாக ஆங்கில மொழியைக் கற்றிருக்க வேண்டும் ;
(iii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நல்லொழுக்கம் உடையவர்களாக இருத்தல் வேண்டும் ;
(iv) விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற இறுதித் திகதிக்கு பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காகத் தேவைப்படுகின்ற சகல தகைமைகளையும் பூர்த்திசெய்ய வேண்டுமென விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற அறிவித்தலில் வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்படுகின்ற இறுதித் திகதிக்கு அத்தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்திசெய்திருக்க வேண்டும்.

8. **அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சை**.- அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலம் புள்ளிகள் வழங்கப்படுகின்றன.

9. **நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படும் முறை :**

| | விடயம் | அதிகூடிய புள்ளிகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. | **மேலதிக கல்வித் தகைமைகள் :** | | |
| | (i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படுகின்ற சட்டம் பற்றிய பட்டத்தில்– | | |
| | முதலாம் வகுப்புச் சித்திக்காக | 20 | |
| | இரண்டாம் வகுப்புச் சித்திக்காக | 15 | 20 |
| | இரண்டாம் வகுப்பின்கீழ் சித்திக்காக | 10 | |
| | (ii) இலங்கை சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டுப் பரீட்சை முதலாம் வகுப்புச் சித்திக்காக | 15 | |
| | (iii) இலங்கை சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டுப் பரீட்சை இரண்டாம் வகுப்புச் சித்திக்காக (புள்ளிகள் பெற்றுக் கொடுக்கப்படுவது பட்டம் அல்லது சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டின் பரீட்சை ஆகிய இரண்டில் பெறப்பட்ட உயரிய தகைமைக்கு மாத்திரமே.) | 10 | |
| 2. | **மேலதிக தொழிற்றகைமைகள் :** | | |
| | (i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது இலங்கைச் சட்டக் கல்லூரியினால் வழங்கப்படுகின்ற சட்டத்துறையின் பட்டப்பின் படிப்பு (LLM) | 15 | |
| | (ii) கற்கைநெறியின் காலப்பகுதி ஓராண்டுக்குக் குறையாத சட்டத்துறையின் பட்டப்பின் சட்ட டிப்ளோமா | 08 | 15 |
| | (iii) கற்கைநெறியின் காலப்பகுதி 6 மாதங்களுக்குக் குறையாத பட்டப்பின் சட்ட டிப்ளோமா | 05 | |
| 3. | **அனுபவம் :** | | |
| | (i) அரசாங்க சேவையில் அல்லது தனியார் துறையில் சட்டத்தரணி ஒருவராக பெற்றிருக்கும் அனுபவம் (விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள அடிப்படைத் தகைமைகளாகிய 3 வருட சேவை அனுபவத்திற்கு மேலதிகமாக சட்டத்தரணியாகப் பெற்றுள்ள அனுபவம் கவனத்திற் கொள்ளப்படுகிறது.) | ஆண்டொன்றுக்கு 05 புள்ளிகள் வீதம் | 30 |
| | ஓராண்டுக்கு 05 புள்ளிகள் வீதம் உச்சப் புள்ளிகள் 30 ஆகும். | | |
| | (நீதிபதி ஒருவரிடமிருந்து அல்லது சனாதிபதி சட்டத்தரணி ஒருவரிடமிருந்து அல்லது 20 வருடங்களுக்குக் குறையாத சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள சட்டத்தரணி ஒருவரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழொன்றின் மூலம் அனுபவத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும்.) | | |
| 4. | **கணினித் தேர்ச்சி :** | | |
| | (i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட தகவல் தொழில்நுட்பப் பாடம் பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் | 15 | |
| | (ii) 6 மாதங்களுக்குக் குறையாத கற்கைநெறிக் காலத்தை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட தகவல் தொழில்நுட்பம் பற்றிய டிப்ளோமா | 10 | 15 |

| | விடயம் | அதிகூடிய புள்ளிகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| | (iii) 3 மாதங்களுக்குக் குறையாத கற்கைநெறிக் காலத்தைக் கொண்ட தகவல் தொழில்நுட்பம் பற்றிய தராதரப்பத்திர கற்கைநெறி | 05 | |
| 5. | **ஆங்கில மொழித் தேர்ச்சி :** | | |
| | (i) பட்டம், பட்டப் பின்படிப்பு, சட்டத்துறைக் கற்கைநெறி சட்டப்பின் கற்கைநெறி ஆங்கில மொழி மூலத்தில் கற்றிருத்தல் (சம்பந்தப்பட்ட சகல பரீட்சை வினாத்தாள்களுக்கும் ஆங்கில மொழியில் விடையளித்திருத்தல் வேண்டும்.) | 15 | |
| | (ii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட ஆங்கில மொழி பற்றிய டிப்ளோமா (கற்கைநெறியின் காலப்பகுதி 6 மாதங்களுக்குக் குறையாத) | 10 | 15 |
| | (iii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட ஆங்கில மொழி பற்றிய தராதரப்பத்திர கற்கைநெறி (கற்கைநெறியின் காலப்பகுதி 3 மாதங்களுக்குக் குறையாத) | 05 | |
| 6. | **நேர்முகப் பரீட்சையில் காட்டப்படுகின்ற திறமை** | 05 | 05 |

10. (i) விண்ணப்பம் 22X29 செ. மீ. அளவிலான A4 தாளில் தயார்செய்ய வேண்டுமென்பதுடன் 1 தொடக்கம் 14 வரையிலான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும், 15 தொடக்கம் முடிவடையும் வரையிலான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்குகின்றவாறு தயார் செய்ய வேண்டும். அதற்கான தகவல்களை தனது கையெழுத்தினாலேயே தெளிவாக எழுதப்பட வேண்டும். சகல விதத்திலும் சரியாகப் பூர்த்தியாகாத அடிப்படைத் தகைமைகள் இல்லாத உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற மற்றும் மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கமைவாக இல்லாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகவிருக்கும். மேலும் பூர்த்திசெய்யப்படுகின்ற விண்ணப்பம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக உள்ளதா என விண்ணப்பதாரர் பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமெனவும் அவ்வாறு இல்லாவிடின் விண்ணப்பம் நிராகரிக்கப்படுமெனவும் மேலும் அறிவித்துக்கொள்கிறேன். விண்ணப்பங்களை இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயார் செய்யவும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது.

**கவனிக்க :**

(அ) விண்ணப்பத்துடன் எந்தவோர் ஆவணமோ அல்லது அதன் பிரதியொன்றோ இணைத்தலாகாது.

(ஆ) வேண்டப்படும்போது ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(ii) அரசாங்க சேவையின்/ மாகாண அரசாங்க சேவையின்/ அரசாங்க கூட்டுத்தாபனங்களில் உள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பங்களைத் தமது திணைக்களத்/நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்ப வேண்டும்.

11. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கை முறை விதிகள் காலத்துக்குக்காலம் அரசாங்க சேவை தொடர்பில் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் நீதி அமைச்சின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்திற்கான சேவைப்பிரமாணம் மற்றும் அதற்குச் செய்யப்பட்டுள்ள திருத்தங்களின் நிபந்தனைகள் இப்பதவிக்காக ஏற்புடையதாகிறது.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
நீதி அமைச்சு.

2015, திசெம்பர் 21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

**நீதி அமைச்சின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்தின்
உதவிச் செயலாளர் (சட்டம்) பதவி**

இல. ..............................................
(அலுவலக உபயோகத்துக்காக)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

(ஆ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

2. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

3. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

4. தொலைபேசி இல. :----.

5. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : | | | | | | | | | | |

6. ஆண்/பெண் :----.

7. பிறந்த திகதி :

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

8. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

9. தேசிய இனம் :----.

10. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது :----.

11. சட்டப் பட்டம் பற்றிய விபரம் :----.

பல்கலைக்கழகம் :----.
பட்டம் வழங்கப்பட்ட திகதி :----.
மொழிமூலம் :----.

12. சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்த திகதி :----.

13. சட்டத்தரணியாகத் தொழில் அனுபவம் : வருடங்கள் :----.

14. விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் 9 ஆம் பந்தியின்படி தகைமைகள் :

(i) :----.
(ii) :----.
(iii) :----.
(iv) :----.
(v) :----.
(vi) :----.
(vii) :----.
(viii) :----.

15. மொழித் தேர்ச்சி : (சம்பந்தப்பட்ட கூட்டினுள் ✓ அடையாளத்தை இடுக.)

| | மிகவும் நன்று | நன்று | சாதாரணம் | மிகக் குறைவு |
|---|---|---|---|---|
| சிங்களம் | | | | |
| தமிழ் | | | | |
| ஆங்கிலம் | | | | |

**விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

.................................................... ஆகிய நான் இதில் குறிப்பிட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவை எனவும், உண்மையானவை எனவும் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டோ, வினைத் திறமையின்மையின் காரணமாக சேவையிலிருந்து ஓய்வுபெறச் செய்யப்பட்டோ இல்லை எனவும், பதவியை கைவிட்டுச் சென்ற ஒருவராகக் கருதப்படவில்லை எனவும் அத்தாட்சிப்படுத்துறேன். இதில் அடங்கியுள்ள தகவல்கள் பொய்யானதென அல்லது பிழையானதென நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து நான் தகுதியற்றவராக ஆக்கப்படுவேன் என்றும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் தெரியவருமிடத்து நட்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்றும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்காக திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திரு./ திருமதி/ செல்வி ..................................................................................... தற்போது இவ்வமைச்சில்/ திணைக்களத்தில் .............. ......................................................... ஆக நிரந்தர/ தற்காலிக/ அமய அலுவலர் ஒருவராக சேவை செய்கின்றார் என்றும் இப்பதவிக்காக அவர் தெரிவுசெய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
அமைச்சு/திணைக்களம் :----.
திகதி :----.

12-444

---

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

**சட்ட அலுவலர் (நிறைவேற்றுச் சேவை வகுப்பின் தரம் III) பதவிக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்**

தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் சட்ட அலுவலர் பதவியில் நிலவும் 1 வெற்றிடத்தினை நிரப்புவதற்காக கீழ்க்குறிப்பிடப்படும் தகைமைகளினை உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

1. **ஆட்சேர்க்கும் முறை**.- அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளினைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரர்களுள் அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்களில் இருந்து வெற்றிடத்தின் எண்ணிக்கைக்கிணங்க ஆட்சேர்ப்புச் செய்யப்படும். அதில் அரச சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட (இல. 6 இன்கீழ் குறிப்பிடப்பட்ட) புள்ளி வழங்கல் முறைமைக்கிணங்க ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

2. **தேவையான தகைமைகள் :**

(i) கல்வி/தொழில் தகைமைகள்.- உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்/பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரியில் சட்டம் பற்றிய பட்டத்தினைப் பெற்றிருத்தல் ;

மற்றும்

உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்னர் மூன்று (3) வருடங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான தொழில் தகைமைகளினைப் பெற்றிருத்தல். (தொடர்ச்சியான தொழில் தகைமைகளினை உறுதிப்படுத்துவதற்குச் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் தொடர்ச்சியான அனுபவம் பெற்ற காலத்தினைத் தெளிவாகக் குறிப்பிட்டு உறுதிப்படுத்தும் நபர் இறப்பர் முத்திரையினை இட்டு கையொப்பமிடல் வேண்டும்.)

(ii) உடல் தகைமைகள்.- அனைத்து விண்ணப்பதாரரும் நாடு முழுவதும் அமைந்துள்ள எந்தவொரு பிரதேசத்திலும் கடமையாற்றுவதற்கும் பதவியின் கடமையினை நிறைவேற்றுவதற்குப் போதுமானளவு உடல் மற்றும் உளத் தகைமையுடையவராயும் இருத்தல் வேண்டும் ;

(iii) வேறு :

* இலங்கைப் பிரசைகளாயிருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தை உடையவராய் இருத்தல் வேண்டும் ;
* பதவிக்குச் சேர்த்துக்கொள்வதற்காகத் தேவையான தகைமைகளினைப் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாக விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட தினத்திற்கு அத்தகைமைகளினை அனைத்து விதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் ;
* மிகவும் சிறந்த முறையில் ஆங்கில மொழியில் கடமையாற்றுவதற்குரியதாயிருத்தல்.

3. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நியதிகளும் சேவை நிபந்தனைகளும்** :

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துடன் கூடியதுமாகும். விதவைகள்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய முறைமைக்குப் பங்களிப்புத் தொகையினைச் செலுத்துதல் வேண்டும் ;

(ii) நியமனம் 3 ஆண்டுகால தகுதிகாண் நிலைக்கு உட்பட்டதாகும். சட்ட உத்தியோகத்தர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கப்பட்டு 3 ஆண்டுகளினுள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் ;

(iii) 2014.01.21 ஆந் திகதி பொது நிர்வாகச் சுற்றுநிருபம் இலக்கம் 01/2014 இற்கிணங்க பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டு 5 ஆண்டுகளினுள் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டதற்கான மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியில் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன், அரச கரும மொழியல்லாத மொழி மூலத்தில் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர் தகுதிகாண் காலத்தினுள் உரிய அரச மொழித் தேர்ச்சியைப் பெறுதல் வேண்டும் ;

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயல் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவைக்கும், அரச நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்பட்டதாய் அமையும்.

4. **வயதெல்லை**.- விண்ணப்பதாரர் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 21 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுதிட்டம்**.- இந்தப் பதவி ரூ. 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூ. 53,555 மாதச் சம்பளத்தினை உடையதாகும். (2006.04.25 ஆந் திகதிய அ. நி. சு. இல. 6/2006 இல் இலக்கம் SLI சம்பளத் தொகுதி).

6. கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சை பின்வரும் புள்ளிகள் வழங்கும் நடைமுறையை அடிப்படையாகக் கொண்டிருக்கும் :-

| | விடயம் | | அதிகபட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. | மேலதிக கல்வித் தகைமைகள் : | | |
| | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சட்டமாணிப் பட்டம் | | 20 |
| | - முதலாம் வகுப்புச் சித்தி | 20 | |
| | - இரண்டாம் வகுப்பு மேல்நிலைச் சித்தி | 15 | |
| | - இரண்டாம் வகுப்பு கீழ்நிலைச் சித்தி | 10 | |
| | சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டின் முதலாம் வகுப்பின் சித்திக்காக | 15 | |
| | சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டின் இரண்டாம் வகுப்பின் சித்திக்காக | 10 | |
| | **குறிப்பு**.- சிறப்புத் தேர்ச்சி சகிதம் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பின் மட்டும் 10 புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும்.) (ஆகக்கூடிய தகைமைக்கு மட்டும் புள்ளி வழங்கப்படும். பட்டத்திற்கு அல்லது சட்டக் கல்லூரித் தகைமை ஆகிய தகைமைகளுள் ஒன்றிற்கு மட்டும்.) | | |

| | விடயம் | | அதிகபட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 2. | மேலதிக தொழில்சார் தகைமைகள் :<br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற குறித்த துறை தொடர்பான ஒரு வருடத்திற்குக் குறையாத பட்டப்பின் படிப்பு டிப்ளோமா அல்லது சட்டமாணிப் பின்படிப்பு டிப்ளோமா பாடநெறியொன்றிற்காக (ஒரு டிப்ளோமா பாடநெறிக்கு 5 புள்ளிகள் வீதம்) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற குறித்த துறை தொடர்பான 6 மாதங்களுக்குக் குறையாத டிப்ளோமா பாடநெறியொன்றிற்காக (ஒரு டிப்ளோமா பாடநெறிக்கு 3 புள்ளிகள் வீதம்)<br>அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற குறித்த துறை தொடர்பான 3 மாதங்களுக்குக் குறையாத டிப்ளோமா பாடநெறியொன்றிற்காக (ஒரு டிப்ளோமா பாடநெறிக்கு 2 புள்ளிகள் வீதம்) | | 15 |
| 3. | மேலதிக அனுபவம் :<br>சட்டத்தரணியொருவராக அரச சேவையில் அல்லது தனியார் துறையில் பெற்றுக் கொண்டுள்ள அனுபவம் - 6 மாதங்களுக்குக் கூடியதும் ஒரு வருடத்திற்குக் குறைந்ததுமான காலப்பகுதி - 2 புள்ளிகள் வீதம் வருடமொன்றிற்கு 5 புள்ளிகள் வீதம் ஆகக்கூடியது 30 புள்ளிகள்.<br><br>(அடிப்படைத் தகைமையைப் பெற்றுக்கொள்வதற்காகச் சட்டத்தரணியொருவ ராகப் பணியாற்றிய 3 வருட சேவைக்காலம் நீங்கலாக)<br><br>(20 வருடங்களுக்குக் குறையாத சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்த சட்டத்தரணி யொருவரிடமிருந்து அல்லது சனாதிபதி சட்டத்தரணியொருவரிடமிருந்து அல்லது நீதவான் ஒருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழொன்றின் மூலம் மேலதிக அனுபவம் நிரூபிக்கப்படல் வேண்டும்.) | | 30 |
| 4. | தகவல் தொழில்நுட்ப அறிவு : | | 15 |
| | பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பிற்காக தகவல் தொழில்நுட்பப் பாடத்தைப் பிரதான பாடமாகப் பின்பற்றியிருத்தல் | 15 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஒரு வருடத்திற்குக் குறையாத அல்லது 1,500 மணித்தியாலங்களைக் கொண்ட தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறியொன்றைப் பின்பற்றியிருத்தல் | 10 | |
| | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தகவல் தொழில்நுட்ப சான்றிதழ் பாடநெறியொன்றைப் பின்பற்றியிருத்தல் : | | |
| | - 6 மாதங்கள்/720 மணித்தியாலங்கள் | 07 | |
| | - 3 மாதங்கள்/360 மணித்தியாலங்கள் | 05 | |
| 5. | ஆங்கில மொழித் தேர்ச்சி : | | 15 |
| | ஆங்கில மொழியில் பின்பற்றப்பட்ட பட்டம்/பட்டப்பின் படிப்பு பட்டம்/சட்ட முதுமாணிப் பட்டம்/சட்டமாணிப் பட்டம் (குறித்த வினாத்தாள்கள் அனைத்திற்கும் ஆங்கில மொழியில் விடை அளித்திருத்தல் வேண்டும்.) | 15 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றில் ஆங்கில மொழி தொடர்பான சான்றிதழ் பாடநெறியொன்றைப் பின்பற்றியிருத்தல் (1 வருடம் அல்லது 1,500 மணித்தியாலங்கள்) | 10 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றில் ஆங்கில மொழி தொடர்பான சான்றிதழ் பாடநெறியொன்றைப் பின்பற்றியிருத்தல் | | |
| | - 6 மாதங்கள்/720 மணித்தியாலங்கள் | 7 | |
| | - 3 மாதங்கள்/360 மணித்தியாலங்கள் | 5 | |
| 6. | நேர்முகப் பரீட்சையின்போது வெளிப்படுத்தும் திறமை | | 5 |
| | மொத்தம் | | 100 |

7. **விண்ணப்பதாரிகளின் ஆள் அடையாளம்.**- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது சகல விதத்திலும் பூர்த்தியான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருக்கும் விண்ணப்பதாரிகளினை மட்டுமேயாகும்.

நேர்முகப் பரீட்சையின்போது எல்லாச் சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகளையும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற்படப்பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் அடையாள அட்டைகள் ஏற்றுக்கொள்ளப் படும் :

(1) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(2) செல்லுபடியான கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்தல்** :

(அ) விண்ணப்பங்கள் 2016.02.08 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பதாக கீழ்க்காணப்படும் முகவரிக்கு பதிவுத்தபாலில அனுப்பல் வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் :

செயலாளர்,
மாநகர சபை மேற்கு அபிவிருத்தி அமைச்சு.
'சுஹுருபாய',
17 ஆவது மாடி,
பத்தரமுல்லை.

(ஆ) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரி விண்ணப்பப்படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவர்களின் விண்ணப்பத்தினை ஏ4 அளவிலான கடதாசியில் தயாரித்து முதல் பக்கத்தில் இலக்கம் 01 தொடக்கம் 06 வரையும் 2 ஆவது பக்கத்தில் இலக்கம் 07 தொடக்கம் இலக்கம் 10 வரையும் வரும் விதத்தில் தயாரித்து தனது கையெழுத்தில் பூரணப்படுத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பம் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "தேசிய பௌதீகவியல் திட்டமிடல் திணைக்களத்தின் சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அரச பாடசாலையின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படையின் அதிகாரம்பெற்ற அலுவலர் அல்லது ரூ. 22,935 மாதாந்த ஒன்றிணைக்கப்பட்ட சம்பளத்தினைப் பெறும் அரசின் நிரந்தர பதவியினை வகிக்கும் அலுவலர் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(உ) தற்பொழுது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள அலுவலர் தமது விண்ணப்பத்தினைத் தான் கடமையாற்றும் திணைக்களத்தின் திணைக்களத் தலைவர் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஊ) இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக அல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் என்பன பற்றி எவ்வித முறையீடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. **பொய்யான தகவல்களினை வழங்கல்.**- தங்களால் அனுப்பப்படும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது தகவல்கள் பொய்யானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பதற்கு முன்னர் கண்டறியப்பட்டால் தங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

அவ்வாறான பொய்யான அல்லது பிழையான தகவல்கள் ஆட்சேர்த்ததன் பின்னர் கண்டறியப்பட்டால் அதற்குரிய வழிமுறைமையின்கீழ் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10. வெற்றிடத்தினை நிரப்பல் அல்லது நிரப்பாது விடுவதற்கான உரிமை அரச சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு.

'சுஹுருபாய',
17 ஆவது மாடி,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

தேசிய பௌதீகவியல் திட்டமிடல் திணைக்களத்தில் வெற்றிடமாக நிலவும் சட்ட அலுவலர் பதவிக்காக ஆட்சேர்த்தல்

(அலுவலக உபயோகத்திற்காக மாத்திரம்)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
சிங்களத்தில் :----.
ஆங்கிலத்தில் :----.

1.1 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் (தெளிவான எழுத்தில்) :
சிங்களத்தில் :----.
ஆங்கிலத்தில் :----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

3. பிறந்த திகதி :

ஆண்டு ---- மாதம் ---- திகதி ----

3.1 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தில் வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

4. பால் (ஆண்-M, பெண்-F) :

(உரிய எழுத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

5. நிரந்தர வதிவிட முகவரி (தெளிவான எழுத்தில்) :----.

6. தொலைபேசி இலக்கம் :

நிரந்தரம் :----.
கையடக்கம் :----.

7. கல்வித் தகைமைகள் :

7.1 க. பொ. த. (உ. த.) பரீட்சை பற்றிய விபரங்கள் :

(i) பரீட்சை வருடம் மற்றும் மாதம் :----.
(ii) பரீட்சை இலக்கம் :----.
(iii) சித்தியடைந்த பாடங்கள் :

| பாடங்கள் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

7.2 பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டம் பற்றிய விபரங்கள் :

(i) பல்கலைக்கழகம் :----.
(ii) பட்டம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருடம் :----.
(iii) பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டம் :----.

8. அனுபவம் :

(i) உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகச் சேவையாற்றிய காலம் :----.

9. தாங்கள் எப்பொழுதாவது அல்லது ஏதேனும் குற்றச் செயலுக்காக நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? :
ஆம்/இல்லை :----.

9.1 ஆம் எனில் விபரங்களினைக் குறிப்பிடுக :----.

10. விண்ணப்பதாரரது சான்றிதழ் :

(அ) இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை நான் அறிந்தவரையில் உண்மை என்றும் சரியானவை என்றும் உறுதிமொழிகின்றேன் ;

(ஆ) என்னால்குறிப்பிடப்படும்விடயங்கள்பொய்யானவைஎனஉறுதிப்படுத்தப்படுமாயின்நான்சேவையில்சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு தகைமையற்றவர் எனவும் நியமனம் பெற்றதன் பின்னர் அவ்வாறு உறுதிப்படுத்தப்படுமாயின் சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு உட்படுவதாகவும் அறிவேன்.

(இ) இங்கு குறிப்பிடப்படும் எவ்வித தகவல்களினையும் பின்னர் மாற்றமாட்டேன்.

----,
விண்ணப்பதாரரது கையொப்பம்.

திகதி :----.

11. விண்ணப்பதாரரது கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :
இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்த .................................... என்பவரை நான் தனிப்பட்ட வகையில் நன்கறிவேன் என்றும், அவர் ........................ ஆந் திகதி என் முன்னிலையில் மேற்குறிப்பிட்ட 10 ஆம் பந்தியின்கீழ் கையொப்பம் இட்டார் என உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரையினை இட்டு உறுதிப்படுத்தவும்.)
திகதி :----.

12. **திணைக்களத் தலைவரின் சிபாரிசு (அரச/மாகாண சபையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்) :**

12.1 அலுவலரின் தனிப்பட்ட கோவைக்கிணங்க, விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு கிட்டிய ஐந்து வருடங்களினுள் வேலை நடத்தை, வருகை, திருப்திகரமானது/ திருப்தியில்லை. அனைத்து சம்பள உயர்வினையும் சம்பாதித்துள்ளார்/ சம்பாதிக்கவில்லை. எவ்வித ஒழுக்காற்று குற்றத்திற்கும் உட்படவில்லை/உட்பட்டுள்ளார்.

12.2 கோரப்படும் பதவிக்கு தெரிவுசெய்யப்படுவாராயின் தற்பொழுதுள்ள பதவியில் இருந்து இந்த அலுவலரை விடுவிக்க முடியும்/ முடியாது. விண்ணப்பப்படிவத்தினைச் சிபாரிசு செய்கின்றேன்/செய்யவில்லை.

திணைக்களத் தலைவரின் கையொப்பமும்,
பதவி முத்திரையும்.

01-447

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## விளையாட்டு அமைச்சு

தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்

### விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமா பாடநெறி - 2016/2017

விளையாட்டு அமைச்சின்கீழ் உள்ள தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினால் சிங்கள மொழி மூலம் நடாத்தப்படும் விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமா பாடநெறியினைப் பயிலுவதற்காக வயது 18 - 35 (அரச சேவையில் பணியாற்றுவோரின் வயது 45 வருடங்களைவிட மேற்படாது இருத்தல் வேண்டும்.) வருடங்களுக்கு இடைப்பட்ட உரிய தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

1. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

1.1 கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி என்பனவற்றுடன் கணிதம்/ எண்கணிதம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக இரு அமர்வுகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் அவற்றில் 3 பாடங்களில் திறமைச் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன் அவர் :

(அ) விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்படும் தேசிய விளையாட்டுப் பெருவிழாவின் மாவட்ட மட்டப் போட்டியொன்றில் முதலாம் அல்லது இரண்டாம் இடத்தைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(ஆ) தேசிய விளையாட்டுச் சங்கமொன்றினால் நடாத் தப்படும் தேசிய மட்டப் போட்டியொன்றில் முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்தைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(இ) பாடசாலைகளுக்கிடையேயான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் 16 வயதிற்கு மேற் பட்டவர்களுக்கான போட்டியொன்றில் முதலாம் இடத்தைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(ஈ) தேசிய விளையாட்டுக் குழுவொன்றின் அங்கத்தவராக தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள், ஆசிய வீர முதன்மைப் போட்டிகள், ஆசிய விளையாட்டுப் போட்டிகள், பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள், உலகக் கிண்ண விளையாட்டுப் போட்டிகள் அல்லது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றியிருத்தல் ;

அல்லது

(உ) விளையாட்டு அமைச்சில் அல்லது அதன்கீழ் உள்ள நிறுவனம் ஒன்றில் அல்லது மாகாண சபையொன்றின் விளையாட்டு உத்தியோகத்தர்களாக கடமையாற்றுதல் அல்லது கல்வி அமைச்சின் விளையாட்டு ஆசிரியராக அல்லது ஆசிரியையாக கடமையாற்றுதல் (குறிப்பு 1 இன் பிரகாரம் உரிய தேவைகளைப் பூர்த்திசெய்திருத்தல் கட்டாயமானதாகும்) ;

அல்லது

(ஊ) அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் விளையாட்டு அல்லது உடற்கல்வி தொடர்பான ஆசிரியராக அல்லது ஆசிரியையாக இருத்தல் அல்லது பயிற்றுவிப்பாளராக இருத்தல் (தொண்டராகச் சேவையாற்றுதல் கவனத்திற் கொள்ளப்படும்.) உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றில் விளையாட்டு மைதான ஆலோசகராக இருத்தல், இளைஞர் சேவைகள் மன்றத்தின் விளையாட்டு உத்தியோகத்தராக இருத்தல் ;

மற்றும்

5 வருட சேவைக்கால அனுபவத்தைப் பெற்றிருப்பதுடன் தேசிய விளையாட்டுச் சங்கமொன்றில் பெற்றுக்கொண்ட விளையாட்டுப் பயிற்றுவித்தல் படிநிலை அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் ;

அல்லது

(எ) முப்படைகள், பொலிஸ் அல்லது சிவில் பாதுகாப்புப் பிரிவின் பயிற்சி வழங்கும் நிறுவனமொன்றில், கல்லூரியில் விளையாட்டு அல்லது உடற்பயிற்சி ஆலோசகராக 6 மாதங்களுக்குக் குறையாத ஆரம்ப மற்றும் உயர்தர பாடநெறி ஒன்றினை வெற்றிகரமாகப் பயின்று பூர்த்திசெய்திருத்தல்.

**முக்கிய குறிப்பு :**

(1) விளையாட்டு அமைச்சின்கீழ் பணியாற்றுவோர் 1 வருட சேவைக்காலத்தினையும் கல்வி அமைச்சின்கீழ் பணியாற்றுவோர் 5 வருட (கல்வியியற் கல்லூரிகளின் உடற்கல்வி ஆசிரியப் பயிலுனர்களுக்கு மாத்திரம் 2 வருடங்கள் சேவைக் காலத்தினைப் பூர்த்திசெய்திருத்தல்) சேவைக் காலத்தினையும் பூர்த்திசெய்திருக்க வேண்டியது கட்டாயமானதாகும்.

(2) உரிய முறையில் மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு ஏற்ப பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**2. விண்ணப்பப்படிவங்களை அனுப்பவேண்டிய முறை :**

2.1 மேலே குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் ஏனைய தகைமைகளைக் கொண்டிருக்கும் அபேட்சகர்கள் இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் படிவத்தினைப் போல் 8" x 13 1/2" அளவுடைய கடதாசியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைத் தமது சொந்தக் கையெழுத்தினால் பூர்த்திசெய்து 2016.02.08 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, "பணிப்பாளர், தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம், இல. 100/7, சுதந்திர மாவத்தை, கொழும்பு 07" என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும் ;

2.2 விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமாப் பாடநெறி - 2016/ 2017 தொடர்பான விண்ணப்பப்படிவம்" எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும் ;

2.3 அரச, உள்ளூராட்சி சேவை மற்றும் கூட்டுத்தாபனங்களில் பணியாற்றும் அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் குறிப்பிட்ட திணைக்களத்தின்/ நிறுவனத்தின் தலைவர்களினூடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

2.4 பரீட்சைக் கட்டணமாக 500 ரூபாவை காசுக் கட்டளையாக "செயலாளர், விளையாட்டு அமைச்சு" எனும் பெயருக்கு குருந்துவத்த தபால் அலுவலகத்தில் மாற்றக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். மேலும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

3. **தேர்ந்தெடுக்கும் முறை**.- இப்பாடநெறி தொடர்பாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களுள் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அனைவரும் எழுத்துமூலப் பரீட்சை ஒன்றிற்கு அழைக்கப்படுவதுடன் ஆட்சேர்ப்புக் குழுவினால் தீர்மானிக்கப்படும் புள்ளிகளைப் பெறுபவர்கள் நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கும், உடற் தகைமைகாண் செயன்முறைப் பரீட்சை ஒன்றிற்கும் அழைக்கப்பட்டதன் பின்னர் பாடநெறிக்காகத் தெரிவுசெய்யப்படுவர்.

**4. பாடநெறி தொடர்பான விபரங்கள் :**

4.1 பாடத்திட்டமானது பின்வருமாறு 5 பிரிவுகளை உள்ளடக்கியதாகும் :

(அ) பயிற்றுவித்தலின் பொதுக் கோட்பாடுகள்.- உடற் தகைமைகள் மற்றும் திறன்கள், நுட்பமுறைகள், உபாய வழிகள், பயிற்றுவித்தல் முறைகள், திட்டமிடல் முறைகள், பயிற்சிச் சுமை மற்றும் பரீட்சித்தல் தொடர்பான கோட்பாடுகள் மற்றும் வாய்மொழிப் பரீட்சை ;

(ஆ) ஆகக்குறைந்தது 10 விளையாட்டுக்கள் தொடர்பான கோட்பாட்டு மற்றும் செயன்முறை அறிவு ;

(இ) சுவட்டு மற்றும் மைதான மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் பற்றிய நிபுணத்துவம் ;

(ஈ) சுவட்டு மற்றும் மைதான மெல்வல்லுநர் விளையாட்டுகளுக்கு மேலதிகமாக விளையாட்டு டிப்ளோமாப் பாடநெறிக் காலத்தின்போது பெண்கள் அல்லது ஆண்டுகளின் பொருட்டு சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான விதத்தில் தெரிவு செய்துகொள்ளும் ஓர் விளையாட்டு தொடர்பான நிபுணத்துவம் ;

(உ) விளையாட்டு உடற்றொழிலியல், விளையாட்டுச் சமூக விஞ்ஞானம், விளையாட்டு நிர்வாகம், விளையாட்டுப் புள்ளிவிபரவியல், விளையாட்டு விழாக்களை ஏற்பாடு செய்யும் முறைகள், விளையாட்டு மருத்துவவியல், விளையாட்டு உயிரி இரசாயனவியல், விளையாட்டுப் போசணை மற்றும் விளையாட்டு உளவியல் போன்ற பொது விடயங்கள் தொடர்பான அறிவு.

4.2 பாடநெறியின் கால எல்லை 12 மாதங்களாகும் ;

4.3 இப்பாடநெறியின் பொருட்டு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களால் பாடநெறிக் கட்டணமாக 30,000 ரூபாவைப் பாடநெறியானது தொடங்கப் படுவதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டியதுடன் பாடநெறிக்கான கட்டணத்தினைச் செலுத்தி நிறைவுசெய்த விண்ணப்பதாரிகள் மாத்திரம் பாட நெறி தொடர்பாக சேர்த்துக்கொள்ளப்படுவர். அவ்வாறே இப்பணமானது காசோலையாக செலுத்தப்படுமாயின் "செயலாளர், விளையாட்டு அமைச்சு" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். மேற்படி பணமானது எக்காரணங்கொண்டும் மீள அளிக்கப்பட மாட்டாது ;

4.4 பாடநெறியினைப் பயிலுவதற்குத் தெரிவுசெய்யப் படுவோர் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் சட்டதிட்டங்களுக்கு அமைய செயற் படுவதற்கு கட்டுப்பட்டவராவார் ;

4.5 பாடநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்பவர் களுக்கு "விளையாட்டு டிப்ளோமா" சான்றிதழ் வழங்கப்படும்.

5. **ஏனைய நிபந்தனைகள் :**

5.1 பாடநெறியின் முடிவில் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு இவ்வமைச்சு பணிக்கப்படவில்லை ;

5.2 இருப்பினும் பாடநெறியினைப் பயில்பவர்கள் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளருடன் உடன்படிக்கை ஒன்றினைச் செய்துகொள்ளல் வேண்டுமென இவ்வமைச்சு கருதும் பட்சத்தில் அவ்வுடன்படிக்கைக்கு உடன்படுவதற்கு பாடநெறியைப் பயிலுபவர்கள் கட்டுப்படல் வேண்டும் ;

5.3 தற்போதுள்ள உயர் தகைமையினை அல்லது கோரப் பட்டுள்ள தகைமையினை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட வேண்டியதுடன் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படாத தரவுகள் பின்னர் முன்வைக்கப்படினும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது ;

5.4 இங்கு குறிப்பிடப்படாத வேறு விடயங்கள் இருக்குமாயின் அவை தொடர்பாக தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனப் பணிப்பாளரின் அபிப்பிராயத்தின் பேரில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பணிப்பாளர்,
தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்.

இல. 100/7, சுதந்திர மாவத்தை,
கொழும்பு 7,
2016, சனவரி 08.

மாதிரி விண்ணப்பப்படிவம்

விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமாப் பாடநெறி - 2016/2017

**தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்**

1. (i) முழுப்பெயர் (திரு./திருமதி/செல்வி) :----.
   (ii) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (iii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

   (iv) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. முகவரி :
   (i) சொந்த முகவரி :----.
   (ii) அலுவலக முகவரி :----.
   தொலைபேசி இலக்கம் (தனிப்பட்ட) :----.
   (அலுவலக) :----.

3. (i) பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

   (ii) 2015.12.31 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. இலங்கைப் பிரசையா ? இல்லையா ? என்ற விபரம் :----.
   இலங்கைப் பிரசையாயின் பதிவின் மூலமா ? அல்லது பரம்பரையினாலா ? என்ற விபரம் :----.

5. (i) பால் (ஆண்/பெண்) :----.
   (ii) திருமணமானவர்/திருமணமாகாதவர் :----.

6. நீங்கள் தொழில் செய்பவரா ? இல்லையா ? என்ற விபரம் :

   (i) பதவி :----.
   (ii) சேவைக்காலம் :----.
   (iii) சேவை நிலையம் :----.

7. (i) கல்வித் தகைமைகள் கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரப் பரீட்சை :
வருடம் :----.
பரீட்சைச் சுட்டெண் :----.

| விடயம் | பெற்றுள்ள சித்திகள் | விடயம் | பெற்றுள்ள சித்திகள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(ii) கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர் தரப் பரீட்சை :
வருடம் :----.
பரீட்சைச் சுட்டெண் :----.

| விடயம் | பெற்றுள்ள சித்திகள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

(iii) வேறு கல்வித் தகைமைகள் (உயர் பரீட்சைகள்/பட்டம்) :
----.
வருடம் :----.
பரீட்சைச் சுட்டெண் :----.

| விடயம் | பெற்றுள்ள சித்திகள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

8. விளையாட்டுத் திறமைகள் (பெற்றுள்ள உயர் விளையாட்டுச் சான்றிதழ்கள் மற்றும் விசேட சாதனைகள் பற்றி இங்கு குறிப்பிடவும். சகல சான்றிதழ்களினதும் நிழற்பிரதிகளை இணைத்து அனுப்பவும்) :

(1) பாடசாலைகளுக்கிடையேயான தேசிய மட்ட 16 வயதிற்கு மேற்பட்ட அடைவுகள் :----.
(2) தேசிய விளையாட்டுப் பெருவிழா அடைவுகள் (மாவட்ட/மாகாண/தேசிய) :----.
(3) தேசிய சங்கங்களின் மூலம் நடாத்தப்படும் தேசிய மட்டப் போட்டிகளில் அடைவுகள் :----.
(4) சர்வதேச மட்டத்திலான பங்குபற்றுதல்கள் :----.

9. (i) வர்த்தமானி அறிவித்தலின் 1.2 பந்தியில் உள்ளவாறு எந்தப் பிரிவின்கீழ் என்பதனைக் குறிப்பிடுக :

| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

(ii) மேலே காட்டப்பட்டுள்ள அப்பந்தியில் தரப்பட்டுள்ள விளக்கங்களுக்கு ஏற்ப பெற்றுக்கொண்டுள்ள தகைமைகள் தொடர்பான விபரங்கள் :----.

10. வேறு விடயங்கள் :----.

11. குருந்துவத்த தபால் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட, பரீட்சைக் கட்டணமாகச் செலுத்தப்பட்ட 500 ரூபாவிற்கான பற்றுச்சீட்டு இலக்கம் :----.
("செயலாளர், விளையாட்டு அமைச்சு" எனும் பெயருக்கு அனுப்பப்பட வேண்டியதுடன், பற்றுச்சீட்டினை இதனுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.)

12. இப்பாடநெறிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் பாடநெறிக் கட்டணமான 30,000 ரூபாவைச் செலுத்துவதற்கு நீங்கள் தயாரா என்பது பற்றிய விபரம் :----.

மேலே என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் உறுதிமொழிகின்றேன். மேற்படி தகவல்கள் உண்மையற்றது என யாதேனும் விதத்தில் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் இப்பாடநெறியைக் கற்பதற்குத் தகுதியற்றவராகக் கருதப்பட்டு பயிற்சிப் பாடநெறியில் இருந்து நீக்கப்படுவேன் என்பதை நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

அரச, உள்ளூராட்சி மற்றும் கூட்டுத்தாபனச் சேவையில் ஈடுபட்டுள்ளோருக்கு மட்டும் :

பணிப்பாளர்,
தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்.

---------- இல் --------- ஆகக் கடமையாற்றும் திரு./ திருமதி/ செல்வி ------------- அவர்களது விண்ணப்பப்படிவத்தைச் சிபாரிசு செய்து முன்னிலைப்படுத்துவதுடன், இவ்விண்ணப்பதாரி மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிக்காகத் தெரிவுசெய்யப்பட்டால் பாடநெறி நடைபெறும் காலத்திற்கு அவரை பணியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

பதவி முத்திரை :

----,
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.

1-402